OPEN ACCESS

Manuscript ID:
TAM-11022026-11416

Volume: 11

Issue: 2

Month: October

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 22.06.2026

Accepted: 15.08.2026

Published: 01.10.2026

Citation:
Sagayaa Susi, A., and S. Ilamaran. "Sangam Literature Land, Family Structure and Kinship." *Shanlax International Journal of Tamil Research*, vol. 11, no. 2, 2026, pp. 80–89.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i2.11416

*Corresponding Author:
sahayosusi@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

Sangam Literature Land, Family Structure and Kinship

A. Sagayaa Susi
Full-Time Ph.D. Research Scholar, Research Centre in Tamil
Register No.: 241130601012
Lakshmipuram College of Arts and Science, Neyyoor, Kanniyakumari District
Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu
https://orcid.org/0009-0009-7244-734X

S. Ilamaran
Assistant Professor, Research Centre in Tamil
Lakshmipuram College of Arts and Science, Neyyoor, Kanniyakumari District
Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu
https://orcid.org/0000-0002-7559-5980

Abstract
Sangam literature is the main source of information for understanding the social history of Tamil Nadu during the Sangam period. There are various relationships in the family such as mother, father, son, daughter. Such relationships existed not only in the contemporary era but also in Sangam literature. Their relationships such as friend-nurse, friend-leader, and servant-leader were intertwined. The mother is obedient to her sons and husband and carries out every action. When the daughter grows up and comes of age, she is seen as a very good role model in the task of protecting and nurturing her.
Keywords: *Sangam Literature, Land, Ethonography, Single Family, Joint Family, Kinship.*

References

1. Balasubramaniam.K.V. "Natrinai" Source and Text, Chennai: New Century Book House (P)Lit. - 2004.
2. Bhaktavatsala Bharathi. "Cultural Anthropology", Meiyappan Pathippagam- 1990,
3. Dhananjayan.A. "Genealogy and Fishermen's Customs" Chennai: New Century Book House (P)Lit- 2012
4. Kaniyanbalan. "Ancient times and Tamil city states" New Century Book House (P) Lit- 2024.
5. Kumari Krishnaveni.La "Sanga Kala Makalir Majsimai" Pandian Women's Research Journal, Volume 5, Special Issue 1 (1) January 2025.
6. Nagarasan.V. "Kuruntogai" Part 1, 2 Source and Text, Chennai: New Century Book House (P)Lit- 2004.
7. Sahaya susi A. "Weaving land chiefs" International Journal of Tamil Language and Literature, Malar -1, July 2025
8. Seyapal. I. "Akananuru" Part 1, 2 Source and Text, Chennai: New Century Book House (P)Lit- 2004
9. Stephen. Nya "Literary Ethnography", Chennai: New Century Book House (P) Lit- 2017.

10. Suda.Su. “Women’s lifestyle in Sangha literature” Tamil Culture and Literature Journal, Malar 4 Special Issue 1, December 2024.
11. Thilagavathi.K. “Women’s Life in the Sangha Period”, Irayarul Publishing House, Trichy-2001.
12. Vanitha. Cha “Weaving of Land Women in Sangha Literature” Research Paper-2013

சங்க இலக்கிய நெய்தல் நில குடும்ப அமைப்பும் உறவுமுறைகளும்

அ. சகாய சுசி
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழாய்வு மையம், பதிவெண் : 241130601012
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,திருநெல்வேலி, தமிழ்நாடு

சு. இளமாறன்
உதவிப் பேராசிரியர், தமிழாய்வு மையம்
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,திருநெல்வேலி, தமிழ்நாடு

ஆய்வுச் சுருக்கம்
சங்ககாலத் தமிழகத்தின் சமூக வரலாற்றை அறிவதற்கு முதன்மை ஆதாரமாக அமைவது சங்க இலக்கிய குடும்பங்களே ஆகும்.குடும்பத்தில் தாய், தந்தை, மகன், மகள் எனப் பல்வேறு உறவுகள் காணப்படுகின்றனர். இத்தகைய உறவுமுறைகள் சமகாலத்தில் மட்டுமன்று சங்க இலக்கியத்திலும் இருந்துள்ளது. நற்றாய்-செவிலி, தோழி-தலைவி, பாணன்-தலைவன் என அவர்களுடைய உறவுமுறைகள் பின்னிப்பிணைத்துக் காணப்பட்டுள்ளது.நற்றாய் அறத்தோடு நிற்றலில் தன் மகன்களுக்கும் கணவருக்கும் கட்டுப்பட்டு ஒவ்வொரு செயல்களையும் செயல்முறைப்படுத்துகிறாள். மகள் வளர்ந்து வயது வந்ததும் அவளைப் பாதுகாத்துப் பேணிக் காக்கும் பணியில் தன்னுடைய இருப்பு என்ன என்பதை மிகச் சிறப்பாக செய்து முடிப்பவளாகக் காணப்படுகிறாள்.
முக்கியச் சொற்கள்: *சங்க இலக்கியம், நிலம், இனவரைவியல், தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம், உறவுமுறை.*

முன்னுரை

பண்பாட்டின் அடையாளமாகவும் நாகரிகத்தின் ஊன்றுகோலாக இன்று நாம் திகழ காரணமாக இருந்தவர்கள் நம் முன்னோர்களான ஆதித்தமிழர்கள். பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம் போன்றவற்றில் சிறந்து விளங்கிய அவர்தம் குடும்ப அமைப்பினையும் உறவுமுறைகளையும் எடுத்துரைப்பதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைகிறது

சங்ககாலத் தொல்குடிகள்

சங்க காலம் என்பது அரசுகள் உருவாகி நிலைபெற்றுவிட்ட காலம் எனினும் அங்கு வளர்ச்சியடைந்த அரசுகளும், தொல்லினக் குழுக்களும் இருந்தன. சங்ககாலத்தில் ஏற்றத்தாழ்வான, சமச்சீரற்ற வளர்ச்சி இருந்து வந்தது. 20 - ஆம் நூற்றாண்டில் கூட இந்தியாவில் தொல்லினக்குழு வாழ்க்கை வாழ்கின்ற பழங்குடிகளை மலைப்பகுதிகளில் காண முடிகிறது. ஆகவே 2500 வருடங்களுக்கு முந்தைய பழந்தமிழகத்தில் பல தொல்லினப் பழங்குடிகள் வளர்ச்சியின் கீழ்மட்டத்தில் இருந்தனர் எனலாம். சான்றாக மழவர், கொங்கர், கோசர், தொண்டையர், எயினர், வடுகர், பரதவர், பூழியர், ஆவியர், அரியர், அருவாளர், குடவர் எனப் பல தொல்லினப் பழங்குடிகள் குறித்துச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது (கணியன்பாலன் ப.எண் 114) என்கிறார்.

குலக்குழு மக்கள்

பழங்குடிமக்கள் பல்வேறு கூட்டங்களாக அல்லது குலங்களாகப் பிரிந்து வாழும் இயல்பினை உடையவர்கள். உறவுமுறையின் அடிப்படையில் கூட்டம் கூட்டமாக வாழும் மாந்தர்களுக்கும், தாவர வகைகள், விலங்கினங்கள், இயற்கைப் பொருட்கள் போன்றவற்றிற்கும் இடையில் ஒருவகைப் புதிரான தொடர்பு நிலவுகிறது. என்னும் நம்பிக்கையே குலக்குறியியல் ஆகும் (ஆ.தனஞ்செயன், 2012, ப. எண்.5) என்கிறார்.

இன்றிலிருந்து 12,000 ஆண்டுகளுக்கு, முன்னர் மனிதர்கள் சிறு சிறு குலக்குழுக்களாக (bands) அமைத்து வாழ்ந்தனர். இக்குலக் குழுக்கள் மண உறவாலும் உறவுமுறையாலும் பிணைக்கப்பட்ட சில குடும்பங்களைக் கொண்டனவாக இருந்தன. இவற்றின் உறுப்பினர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாகவும். குழுவின் அளவு சிறியதாகவும் இருந்தது. ஒவ்வொரு குலக்குழுவும் தன்னளவில் தற்சார்புடையதாகவும் தனித்துச் செயற்படக் கூடியதாகவும் விளங்கியது. வேளாண்மை தோன்றிய காலம் வரை அல்லது 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் வரை ஏறக்குறைய அனைத்துச் சமுதாயங்களும் குலக்குழுக்களாக வாழ்ந்தன என்று மானிடவியலறிஞர்கள் மதிப்பிடுகின்றனர்.

இன்றும் வேட்டையாடி உணவு சேகரித்து வாழும் பல மக்களிடம் குலக்குழு அமைப்பு நிலவுகிறது. வேட்டையாடுதலையும் உணவு சேகரித்தலையும் வாழ்க்கைப் பொருளாதாரமாகக் கொண்ட இவர்கள் மண்ணில் புதைந்து கிடப்பனவற்றையும் (கிழங்கு வகைகள்) நிலத்தின் மேற்பகுதியில் கிடைப்பனவற்றையும் (காட்டு விலங்குகளை வேட்டையாடுதல் காட்டுப் பொருள்களைச் சேகரித்தல்) நீரில் கிடைப்பனவற்றையும் (மீனும் பிற நீர்வாழ் உயிரினங்களும்) மட்டும் தொழில் நுட்பத்தைக் கொண்டுள்ளனர். இவ்வகையான தொழில் நுட்பத்தைப் பெற்றோர் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி வாழ்தல் இயலாது. பருவக்காலத்திற்கு ஏற்ப தங்களது இருப்பிடத்தை மாற்றி அமைக்கும் சூழலும் இத்தகைய மக்களுக்கு ஏற்படும். (பக்தவத்சல பாரதி, 1995, ப.எண் 297, 298). பண்பாட்டின் கருவூலமாகத் திகழ்ந்தவர்கள் நம் பழந்தமிழர்கள் என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.

இனவரைவியல்

இனவரைவியல் என்பது ஒரு குறிப்பிட்ட மனித இனம் அல்லது சமூகத்தின் பண்பாட்டை அறிவதற்கு, அப்பண்பாட்டையுடைய மக்களோடு குறுகிய காலமோ அல்லது நீண்ட காலமோ வாழ்ந்து, கள ஆய்வு உத்தி முறைகளைப் பயன்படுத்தி, அவர்களின் எல்லாவிதமான மரபுகள் பற்றியும் அறிந்து, அதனை அப்படியே முறைப்படுத்தி எழுத்துப் பூர்வமாக அளிக்கும் ஆவணமே இனவரைவியல் என்பதாகும். பக்தவத்சல பாரதி அவர்கள் சமுதாயப் பண்பாட்டு மானிடவியலுக்கு அடித்தளமாகத் திகழ்வது இனக்குழுவியலேயாகும். இனக்குழுவியல் என்னும் பொருளுடைய Ethnography என்னும் ஆங்கிலச் சொல் Ethnos, graphein ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. ethnos என்பதற்கு இனம், இனக்குழு, மக்கள் என்பது பொருள் என்பதற்கு எழுதுவது அல்லது வரைதல் என்பது பொருள். ஆகையால் இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது. ஒரு இனக்குழுவைப் பற்றிய முழுமையான படிப்பு என்னும் வகையில் இப்பிரிவை இனக்குழுவியல் என்றும் கூறலாம் (பக்தவத்சல பாரதி, 1990, ப.எண் 117) எனக் குறிப்பிடுகிறார்.

இனவரைவியல் ஆய்வு நெறிமுறைகளையும் உத்திமுறைகளையும் மட்டும் கொண்டதன்று. பண்பாட்டுரீதியான பொருள்கோள் முறைகளையும் பல்வேறு அடிப்படைக் கருத்தாக்கங்களையும் கொண்டு இனவரைவியல் ஆய்வு வடிவமைக்கப் படுகின்றது. (ஞா.ஸ்டீபன், 2017, ப.எண்.4) எனக் குறிப்பிடுகிறார்

இனவரைவியல் கூறுகள்

1. புவிச்சூழலியல்
2. சுற்றுச்சூழல்
3. காலநிலை
4. குடியிருப்பு முறை
5. பொருள்சார் பண்பாடு
6. குடும்ப அமைப்பு
7. திருமணமுறை
8. உறைவிட முறை
9. வாழ்வியற் சடங்குகள்
10. குழந்தை வளர்ப்பு முறை
11. பண்பாட்டுவயமாக்க முறை
12. மக்களின் உணவியற் பாங்குகள்
13. மணக்கொடை
14. மண விலக்கு முறை
15. வாழ்க்கைப் பொருளாதாரம்
16. தொழிற் பகுப்பு
17. உற்பத்தி முறை
18. நுகர்வு முறை
19. பங்கீட்டு முறை
20. பரிமாற்ற முறை
21. கைவினைத் தொழில்கள்
22. அரசியல் முறை
23. அதிகார உறவுகள்
24. சமூகக்கட்டுப்பாடு
25. மரபுசார் சட்டங்கள்
26. சமய நம்பிக்கைகள்
27. சடங்குகள்
28. வழிபாட்டு முறைகள்
29. மந்திரம்
30. சூனியம்
31. விழாக்கள்
32. இசை
33. விளையாட்டுகள்
34. அழகியற் சிந்தனைகள்
35. வழக்காறுகள்
36. ஈமச்சடங்குகள்

(பக்தவத்சல பாரதி 1990, ப.எண் 118, 119)

இத்தகைய 36 கூறுகளை ஆராய்வதன் மூலம் ஒரு குறிபிட்ட சமூகத்தைப் பற்றி அல்லது இனக்குழு பற்றிய செய்திகளை முழுமையான ஆய்விற்கு உட்படுத்த முடியும் என பக்தவத்சல பாரதி கூறுகிறார்.

இல்லறம்

'இல்லறம்' என்னும் சொல்லாட்சி சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை.ஆனால், இல்லறம் என்னும் சொல் உணர்த்தும் பொருள் தரக்கூடிய சொற்களான மனை, மனைக்கிழமை ஆகிய சொற்கள் பயின்று வந்துள்ளன. திருவள்ளுவர் 'இல்வாழ்க்கை' என்று குறிப்பிட்டுள்ளார். திருக்குறளுக்குப் பின்னர் தோன்றிய நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு காப்பிய நூல்களிலும் 'மனையறம்' என்னும் சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டுள்ளது. 'இல்லறம்' என்னும் சொல்லாட்சி முதற்கண் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய சிறுபஞ்சமூலத்தில் 'துறவறம் பொய், இல்லறம் மெய்யாம்' என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. (முனைவர் க.திலகவதி, ப.எண் 81, 82)

இலக்கியங்கள் பண்டைய தமிழர்களின் வாழ்வியல் கூறுகளை எடுத்துரைப்பதாக இருக்கின்றன. காலத்தால் முற்பட்ட தொல்காப்பியம் பெண்களுக்கும் ஆண்களுக்குமான விதிமுறைகளை கட்டமைத்திருக்கிறது. அகத்தையும் புறத்தையும் கொண்டிருக்கும் சங்க இலக்கியம் 'காதல்யுகக் காலம்' என்றும் 'வீரயுகக்காலம்' என்றும் அழைக்கப்படுகிறது. பெண்கள் தங்களது வாழ்க்கைத் துணையைத் தாங்களே தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றும் அவரவர் நில அமைப்புகளுக்கு ஏற்ற தொழில்களை மேற்கொண்டும் வந்துள்ளனர். (முனைவர் சுதா.சு) இவ்வாறு பண்டையத் தமிழரின் இல்லற முறை மற்றும் அதன் தேர்வுமுறையையும் பற்றி அறியமுடிகிறது.

இனக்குழுக்கள்

இந்தியாவின் பெரும்பான்மையான நிலப்பரப்புகளில் வாழும் பழங்குடி மற்றும் பல சாதிகளைச் சேர்ந்த மக்கள் தம் வாழ்வை வேட்டையாடுதல், மீன்பிடித்தல் மற்றும்

காடுகளில் பொருள் சேகரித்தலின் மூலமே நடத்துகின்றனர். ஆனால் தம் வேலையைப் பூர்த்தி செய்துகொள்ள அந்த மூன்று வேலைகளை மட்டும் முழுமையாக சார்ந்திருப்பதில்லை. இனக்குழு என்பது ஒரு பெரிய சமுதாயத்தில் இனம், மொழி, தேசியம் அல்லது கலாச்சாரம் ஆகியவற்றின் பொதுவான உறவுகளால் பிரிக்கப்பட்டு பிணைக்கப்பட்ட மக்கள்தொகையின் சமூகக்குழு அல்லது வகையாகும். இது பன்முகத்தன்மை என்பது பெரும்பாலான சமகாலங்களில் காணப்படும் சமூகச் சிக்கலின் ஒரு வடிவமாகும். (சகாய சுசி.அ)

குடும்பம்

தாய், தந்தை, மகள், மகன் ஆகியோர் அடிப்படைக் குடும்ப உறுப்பினர்கள் ஆவர். இவர்கள் இரத்த சம்பந்தமான உறவுமுறை உறுப்பினர்கள் ஆவர். இவர்களுடன் செவிலி, தோழி போன்றோரும் தொடர்புடையவர்களாகச் சங்க இலக்கியப் பாடல்கள் வழிக் கூறப்படுகின்றனர். குடும்ப வாழ்வினை அடித்தளமாகக் கொண்டு பாடப்பட்டவை தமிழ் இலக்கிய அகத்திணைப் பாடல்கள். இக்குடும்ப வாழ்வின் அடித்தளமாக மனைவி விளங்குகிறாள்.சங்கப் பாடல்களில் இவளை மனை, மனைவி, மனைமுதலல், மனைவியர், மனையாள், மனையோள், மனையுறை, பெண், பெண்டிர், பெண்டு, தையல், மகடூ, மடந்தை, செல்வி, துணை, துணைவி, துணைவியர், இற்கிழத்தி, காதலி, நகர், முதலாட்டி என மொத்தம் இருபத்திரெண்டு சொற்கள் காணப்படுகின்றன. (வனிதா.சா)

குடும்ப வகைகள்

குடும்பம் என்பது ஒரு சமூகத்தின் ஆணிவேர். அது தனிநபர் பலரை அடங்கியது. பல தனிமனிதர்கள் இணைந்து ஒரு குடும்பமாக உருவெடுக்கின்றனர். பல குடும்பம் ஒன்றிணைந்து ஒரு சமூகம் உருவாகிறது. சமுதாயத்தில் குடும்பத்தின் தன்மை நான்காகக் காணப்படுகின்றன. அவை தனிக் குடும்பம், கூட்டுக்குடும்பம், விரிந்த குடும்பம் மற்றும் கலப்புக் குடும்பம் என்பனவாகும்.

தனிக்குடும்பம்

திருமணமான கணவன் மனைவி அவர்தம் பிள்ளைகள் ஆகியோரைக் கொண்டது தனிக் குடும்பம் ஆகும்.சங்க இலக்கியம் குறிப்பிடும் நெய்தல் நிலத்திலும் தனிக்குடும்பம் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. அவை,

வயச்சுறா எறிந்த புண்தணிந்து, எந்தையும்
நீல்நிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்
உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்புவிளை கழனிச் சென்றனள் அதனால்
பனி இரும் பரப்பின் சேர்ப்பதற்கு
இனிவரின் எளியள்என்னும் தூதே

(குறுந் பா.269. 3-8)

எனது தந்தை சுறாமீன் எறிந்த புண்பட்டு மீன் வேட்டைக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருக்கிறார்.அவரைக்கவனிக்கஎன்தாய்உப்பு வாணிகத்திற்குச் செல்லவில்லை. இப்போது இருவரும் அவரவர் பணிக்குச் சென்று விட்டதால் மனைக்கண் ஒருவரும் இலர் என்கிறாள். இப்பாடலில் இடம்பெற்ற தலைவி கூற்றால், தம் குடும்பத்தில் தாயும் தந்தையும் தத்தம் பணிகளுக்குச் சென்று விட்டதால்,தான்மட்டுமேதனியேஇருப்பதாகக் கூறுவதன் மூலம் தந்தை, தாய், மகள் ஆகிய மூவரைக் கொண்ட அழகான தனிக்குடும்பம் இருந்திருப்பதை அறியமுடிகிறது.

தலைவனே இரவில் இனி நீ வரவேண்டாம். என் தந்தை கடல் மேல் சென்று படகின் விளக்கொளியில், தான் பிடித்து வந்த பலவகை மீன் இனங்களை என் அண்ணன்மார்க்குக் காட்டுவதற்குச் சென்றவர் இரவில்தான் வீட்டிற்கு வருவார். என் தாயும் தெய்வத்தை வழிபட அவள் தோழிமாருடன் சென்றுவிட்டாள் என்கிறாள்.இதனை,

திரைச்சுரம் உழந்த திண்திமில் விளக்கில்
பல்மீன் கூட்டம் என்னையர்க் காட்டிய,
எந்தையும் செல்லுமார் இரவே, அந்தில்

அணங்குடைப் பனித்துறை கைதெழுது ஏத்தி
யாயும் ஆயஅமாடு அயரும்
- (அகம் பா. 240 5-9)

இப்பாடலால் நெய்தல் நிலத் தனிக்குடும்பக் காட்சி அழகாகச் சித்தரிக்கப்பட்டு, தந்தை, தாய், தமையன்மார், மகள் என அழகான குடும்ப நிகழ்வு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தனிக்குடும்பத்தில் தாயின் பங்கு

இருவர் இணைந்து வாழும் தனிக்குடும்ப வாழ்க்கையில் மகப்பேறு எய்தியவுடன் மனைவிக்குப் பெருமை ஏற்படுகிறது. அம்மனைவி தான் பெற்ற மகளை வளர்த்து, வயது வந்த நிலையில் அவளது செயல்களை உற்று நோக்கிக் கவனித்து நன்முறையில் வளர்க்கும் பெரும்பங்குதாய்க்கு ஏற்படுகிறது. பரதவனின் மனைவி களவு வாழ்வில் ஒழுகிய தமது மகளின் ஒழுக்கத்தைப் பற்றி ஊர்ப் பெண்கள் அலர் பேச அவர்களின் பேச்சுக்கு அஞ்சித் தன் மகளைக் கோபத்துடன் நோக்கினாள்.

.. துறைவனோடு அன்னை
தான் அறிந்தன்றோ இலளே பானாள்,
சேரிஅம் பெண்டிர் சிறு சொல் நம்பி
சுடுவான் போல நோக்கும்
- (நற் பா.175.5-8)

என்னும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

தன் மகளின் களவொழுக்கத்தால் எழுந்த அலரின் காரணமாக அவளின் தாய் இற்செறித்தாள். தாயின் இற்செறிப்புப் பற்றித் தோழி கூறுகையில், தாழையாடை சில உறுப்புக்களை மட்டுமே மறைக்கும். ஆனால் தாய் இற்செறித்துத் தலைவியை முழுவதும் மறைத்தாள் என்கிறாள், (இற்செறிப்பு - தலைவி தலைவனுடன் சேர்வதைத் தடுக்கும் ஒரு வகையான கட்டுப்பாடாகும்)

துத்திப் பரந்தள் பைத்து அகல் அல்கும்
திருந்து இழைத் துயல்புக் கோட்டு
அசைத்த பசுங்குழைத்
தழையினும், உழையின் போகான்
தான் தந்தனர், யாய் காத்து ஓம்பல்லே -
குறுந் பா.294 5-8)

தாய் முழுவதும் மறைத்தாள் என்று கூறுவது. யாரும் காணமுடியாத அளவு தனிக்குடும்ப அமைப்பில் அருங்கடிப்படுத்தி தன் மகளைக் காத்து ஒழுகிய திறம் அறியப் படுகிறது. (அருங்கடி- அரிய காவல்)

தாய் தன் மகளை அருங்கடிப் படுத்தியதோடு அல்லாமல் தன் மகளின் களவொழுக்கத்தைப் பற்றி ஊரிலுள்ளோர் பழிச்சொல் கூற, அவர்களின் செயல்கேட்டு மனமுடைந்தவள் தன் மகளின் களவுவாழ்வு தொடரக் கூடாதென்று சிறிய கோலினால் அடித்துத் துன்புறுத்தினாள் என்பதனை,

மறுகில் பெண்டிர் அம்பல் தூற்ற
சிறு கோல் வலந்தனள்' அன்னை அலைப்ப
அலந்தனென் வாழி - (நற்பா 149 .3-5)

என்னும் பாடல் வரிகளின் மூலம் சங்க இலக்கிய நெய்தல் நில பெண் பிள்ளைகள் கண்டிப்புடன் ஒழுக்கமாகவும் வளர்க்கப் பட்டுள்ளனர். மேலும், களவுக் காலத்தில் மகளின் மீது கண்டிப்புடன் இருக்கும் அன்னையின் நிலை இவ்வாறு இருக்க, மகளின் நிலையோ தான் ஒழுகும் களவொழுக்கம் தாய்க்குத் தெரிந்து விடுமோ? என அச்சப்படுவதாக உள்ளது.சான்றாக,

மகள் தலைவன் தன்னைக் காண வரும் போதெல்லாம், மறைந்து ஒழுகும் இந்நட்பு அன்னைக்குத் தெரிந்து விடுமோ? என அஞ்சுகிறாள் இதனை,

புலர்வது கொல், அவன் நட்பு! எனா
அஞ்சுவள்- தோழி! என் நெஞ்சுத்தானே!
(நற் பா.72 10-11)

என்ற வரிகள் உணர்த்துகின்றன.மற்றொரு பாடலில், மகளின் அச்சம் கீழ்வருமாறு சுட்டிக்காட்டப்படுகிறது. பிரிவினால் தலைவி மெலிவடைந்தாள்.வளையல்நெகிழ,உடலில் அயர்ச்சி தோன்ற வருத்தத்துடன் இருந்தாள். தன் உடல் மெலிவிற்கான காரணத்தை அன்னை அறிந்தாள் நான் இறவாது உயிருடன் இருத்தல் கூடுமோ? எனத் தன் தாய் மேல் அச்சப்படுகிறாள்.என்பதனை,

ஆய்வனை நெகிழவும் அயர்வுமெய் நிறுப்பவும்
நோய்மலி வருத்தம் அன்னை அறியின்
உளெனோ வாழி- தோழி விளியாது
(குறுந் பா. 316 1-3)

மேற்கண்ட பாடல் விளக்கங்களால் நெய்தல் நிலக் குடும்பங்களில் பெண் பிள்ளைகளின் ஒழுக்கத்தில்தாய்தனிக்கவனம்செலுத்தியதோடு, கண்டிப்புடனும் இருந்துள்ளாள். அத்தாய்க்குப் பருவம் எய்திய மகளும் அச்சத்துடன் இருந்துள்ளாள் என்பதும் அறியமுடிகிறது.

தனிக்குடும்பத்தில் தமையனின் பங்கு

தனிக்குடும்ப அமைப்பில் தந்தை, தாய், மகள், மகன் அடங்குவர். மகனில் தம்பி அல்லது அண்ணன் அடங்குவர். இவர்கள் தன் தந்தைக்குத் தொழிலில் மிகவும் உறுதுணையாக இருந்ததோடு, தன் தங்கை மீதும் பரிவுடனும் பாசத்துடனும் இருந்துள்ளனர்.

எடுத்துக்காட்டாக குறுந்தொகைப் பாடலில், புன்னை மரநிழலில் தோழியுடன் தலைவனை எதிர்பார்த்திருக்கும் பரதவனின் தங்கையாகிய தலைவி, தலைவன் வரவில்லையே என்ற ஏக்கத்துடன் காத்திருந்தாள். அப்போது கடலில் மீன் வேட்டைக்குச் சென்றிருந்த தன் தமையன்மாருடைய படகுகள் திரும்பி வருவதைக் கண்டு அச்சமடைந்தாள்.

கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
இன்னும் வாரார் வரூஉம்
பல்மீன் வேட்டத்து என்னையர் திமிலே
(குறுந் பா.123. 3-5)

தன் தமையன்மார் வந்துவிட்டதால் இனி இப்பொழிலில் தலைவனைக் காணமுடியாது எனத் தன் தமையன்மார்க்கு அச்சப்படும் தங்கையின் உணர்வு பிரதிபலிக்கப்படுகிறது.

பரத்தையை நாடிச்சென்ற தலைவன் பரத்தையைப் பிரிந்து மீண்டும் தலைவியிடம் தன் நட்பைத் தொடர பாணனைத் தூது அனுப்புகிறான். அப்பாணனிடம் தோழி! பாணா! கொழுத்த மீனையுண்டு மாளிகையில் தன் ஐயன்மார் சினமுடையவராய் உள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் தலைவனைக் காண வர இயலாது எனத் தன் ஐயன்மார்க்கு அச்சப்படும் தங்கையின் குணம் குறிப்பிடப் படுகிறது. இதனை, (ஐயன்மார்- தமையன்மார்)

கொழுமீன் ஆர்கைச் செழு நகர் நிறைந்த
கல்லாக் கதவர் தன் ஐயர் ஆகவும்
(நற் பா.127.4-5)

பரதவர்களின் தங்கையர் தன் தமையன்மார்க்கு மதிப்பளித்து அவர்தம் குணங்களுக்கு இசைந்தும் இருந்துள்ளனர் என்பது புலப்படுகிறது.

கூட்டுக்குடும்பம்

சங்க இலக்கியத்தில் செல்வ வளத்துடன் கூடிய பெருங்குடும்பங்கள் இருந்த செய்தியையும் அறிய முடிகிறது. அவ்வகையில் பரதவக் குடும்பங்களிலும் பெருங்குடும்ப அமைப்புகள் இருந்துள்ளன. எடுத்துக்காட்டாக குறுந்தொகைப் பாடலில், விருந்தினர் உண்டு செல்வதற்காக அடையா வாயிலை உடைய நெய்தல் நிலச் செல்வப் பெருங்குடும்பங்கள் இருந்துள்ளன. அவ்வாறு விருந்துண்டு செல்வோரில், அவ்வில்லத்தின் இளமகளைக் காதல் புரியும் தலைவனும் விருந்துண்டு தலைவியை நுகர்ந்து இன்புற்றுள்ளான். மாலைவேளையில் விருந்தினர்களுடன் தலைவனும் வந்து இல்லத்தார் அறியாமல் தலைவியைத் தூய்த்துச் சென்றுள்ளான் என்பதன் மூலம் பெருங்குடும்பப் பெருமை விளக்கப்படுகிறது.

புள்ளும் மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நார்இல் மாலை,
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்,
'வருவீர் உளீரோ?' எனவும்
வாரார் - தோழி! - நம் காதலோரே -
(குறு பா. 118.1-5)

என்னும் பாடல் மூலமாக அறியமுடிகிறது.

பெருங்குடும்பத்தில் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இல்லப்

பணிகளும் மிகுதியாக இருக்கும். அதனால் தான் விருந்தினனாக வந்த தலைவனை யாரும் அறியாமல் விருந்தினனாகப் போற்றியுள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது.

விரிந்த குடும்பம்

ஒரே இல்லத்தில் தங்காமல் அண்மையில் தங்கிப் பொதுவான பணியில் அனைவரும் ஒன்றாக, ஈடுபடும் உறுப்பினர்களைக் கொண்டது விரிந்த குடும்பம்.

உமணர்களின் வாழ்வின் வழி அறியலாம். மேலும், பரதவரும் வேட்டை மேற்செல்லும் போது குழுவாகச் சென்றுள்ளனர்.

உமணர்கள் உப்பு வாணிகம் பொருட்டுச் செல்லும் போது கூட்டமாகச் செல்வர். மகளிர் வண்டி ஓட்டுவர், அவர்களில் வலியவர்கள் எருதுகளைக் காத்து ஓட்டிச் செல்வர். வண்டி சேற்றில் அழுத்தினால் பகடு பற்றிக் கூட்டு முயற்சியால் கரை சேர்ப்பர்.

உவர்வினை உப்பின் கொள்ளை சாற்றி
அதர்படு பூழிய சேண்டபுலம் படரும்
ததர்கோல் உமணர் பதிபோகு நெடுநெறிக்
கணநிரை வாழ்க்கைதான் நன்று கொல்லோ?

(அகம்.390.1-4)

இவ்வாறு வணிக்தின் பொருட்டுச் சேர்ந்து செல்லும் இவர்களின் குடும்ப வாழ்க்கை விரிந்த குடும்ப வாழ்க்கையாகும்.

உமணர்கள் உப்பினை மலைநாட்டு ஊர்களில் கொண்டுபோய் விலை கூறி விற்பர். ஓர் இடத்திலும் நிலைத்தில்லாத வாழ்க்கையைக் கொண்டது உப்பு வணிகர் கூட்டம். அவ்வணிகர்கள் தம் வண்டியின் அச்சு இயல்பு கெட்டு அழிந்த போது அதனை வீசி எறிந்தபடி செல்வர் என்னும் குறிப்பும் சங்க இலக்கிய பாடல்களில் இடம்பெறுகிறது.

உவர் வினை உப்பின்குன்று போல் குப்பை
மலை உய்த்துப் பகரும், நிலையா வாழ்க்கை
கணம் கொள் உமணர் உயங்குவயின் ஒழித்த
பண் அழிப் பழம் பார்

(நற் 138. 1-4)

சென்றுள்ளனர் என்பதும், வண்டியின் அச்சுத் தேயத் தேய அதனை எறிந்து விட்டுப் புதியதை மாட்டுவர் என்பதன் வழி, நீண்ட நாட்கள் உமணர்கள் பல ஊர்களில் தங்கி விரிந்த குடும்பங்களாக வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகிறது.

இவ்வுமணர்கள் போலப் பரதவரும் கடற்மேற் மீன் வேட்டைக்குச் செல்லும் போது இளைஞர் முதியவர் என்று குழுவாகச் சென்றுள்ளனர். சான்றாக அகநானூற்றுப் பாடலில், மீன் வேட்டைக்கு இளைஞரும் முதியவரும் சென்று உள்ளனர். திரும்பி வரும்போது மீன்பாடு அதிகம் கிடைக்க மகிழ்ச்சியில் தம் மனைவி மற்றும் சுற்றத்தாருடன்மகிழ்ச்சியுடையவராய்அன்று பொழுதைக் கடற்கரையில் கழித்திருந்தனர். இதனை,

கடல் பாடு அழிய, இனமீன் முகந்து
துணை புணர் உவகையர் பரத மாக்கள்
இளையரும் முதியரும் கிளையுடன்
துவன்றி

(அகம் 30. 2-6)

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன. இவ்வரிகளால் குழுவாகச் செய்யக் கூடிய பணிகளில் முதியவர்களின் அனுபவத்தை இளைஞர்கள் பெற்று அப்பணிகளைச் செய்துள்ளனர். அதனால் பெற்ற பணதைப் பரதவப் பெருங்குடும்பங்களில், தம் மனைவியருடன் பங்கிட்டு மகிழ்வுடன் இருந்துள்ளனர்.

சமூகவியலார் குறிப்பிடும் கூட்டுக்குடும்பம், கலப்புக் குடும்பம் பற்றிய செய்திகளைச் சங்க இலக்கிய நெய்தல் நிலக் குடும்பங்களில் அறிய இயலவில்லை.

உறவுமுறை

அன்பின் வெளிப்பாடே மனிதநேயமாகும். வாழ்வியலின் அடிப்படை அன்பே. மனித வாழ்வு வளமாக அமைய வாழ்வியல் நெறிமுறைகள் இன்றியமையாததாகும். பழந்தமிழர் பெண்களின் வாழ்வு போற்றத்தக்கதாய்

இருந்தது. அவர்கள் பண்பாடு மிக்கவர்களாகவும், நற்குணங்களைக் கொண்டவர்களாகவும் விளங்கினர். வறுமையில் மற்றவர்களுக்கு உதவினர். (முனைவர். குமாரி கிருஷ்ணவேணி. ல)

முடிவுரை

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பது முதுமொழி ஆகும்.குடும்பங்கள் ஒவ்வொன்றும் வளமையின் ஆதாரமாகும். கூட்டுக் குடும்பங்கள் பல விதமான அனுபவங்களை சுமந்து நிற்கும் தூணாக விளங்குகிறது. இன்றைய சூழலில் குடும்பங்கள் பெரும்பாலும் தனிக் குடும்பமாகவே உள்ளன. இதற்கு வித்தாக சங்க இலக்கியத்திலும் தரவுகள் காணப்பட்டுள்ளது. தனிக்குடும்பத்தின் பங்கு, கூட்டுக்குடும்பத்தின் பங்கு என பல்வேறு வகையில் குடும்பங்கள் சங்க இலக்கியத்திலும் பேசப்பட்டிருக்கிறது. ஒழுக்கத்தில் சிறந்து விளங்கியவர் சங்கத்தமிழர் என்பதும் அவர்தம் குடும்ப உறவுமுறைகளையும் பற்றி இக்கட்டுரை மூலம் அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. கணியன்பாலன். தொல் பழங்காலமும் தமிழக நகர அரசுகளும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்- 2024.
2. குமாரி கிருஷ்ணவேணி.ல சங்க கால மகளிர் மாட்சிமை பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ், தொகுதி 5, சிறப்பிதழ் 1 (1) ஜனவரி 2025.
3. சகாயசுசி. அ. நெய்தல் நிலத் தலைமக்கள் தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், மலர்-1, ஜூலை 2025
4. சுதா.சு. சங்க இலக்கியங்களில் பெண்களின் வாழ்க்கை முறை தமிழ் பண்பாடு மற்றும் இலக்கிய ஆய்விதழ், மலர் 4 சிறப்பிதழ் 1, டிசம்பர் 2024.
5. செயபால். இரா. அகநானூறு பாகம் 1, 2 மூலமும் உரையும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 2004
6. தனஞ்செயன். ஆ. குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும் சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 2012
7. திலகவதி.க. சங்க கால மகளிர் வாழ்வியல், இறையருள் பதிப்பகம், திருச்சி, 2001.
8. நாகராசன்.வி. குறுந்தொகை பாகம் 1, 2 மூலமும் உரையும், சென்னை:நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 2004.
9. பக்தவத்சல பாரதி. பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம் வெளியீடு, 1990,
10. பாலசுப்பிரமணியம்.கு.வெ. நற்றிணை மூலமும் உரையும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 2004.
11. வனிதா. சா. சங்க இலக்கியத்தில் நெய்தல் நில மகளிர் ஆய்வேடு, 2013
12. ஸ்டீபன். ஞா. இலக்கிய இனவரைவியல், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2017.